# கலைக்கோபுரங்கள்

**Que.1**. கீழ்வரும் கவிதையினைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை தருக.

களிக்கும் தேகத்திற்கு இனிதே

சந்தோசத்துக்காகவும் பணம் சேர்க்க

சத்துருக்களை ஓட்டிட இனிது

சங்கத்தோர் வினோதிக்கவும் இனிது

தரணியரோடு பிணங்கிட இனிது

தரை சஞ்சாரத்துக்கு இனிதே.

1. இக்கவிதை வரிகள் உணர்த்தும் கலை எது?
2. வினோதம், சத்துரு – பொருள் எழுதுக.
3. இப்பாடலின் பொருள் எழுதுக.

**Marks : (4)**

**Ans.**

1. சிலம்பாட்டம்
2. வினோதம் – மகிழ்ச்சி, சத்துரு – பகைவன்.
3. சிலம்பாட்டச் சிறப்பு. (சிலம்பம் உள்ளம், உடல், கண், காது) முதலியவைகளுக்கு இன்பம் தருகிறது.

**Que.2**. பாடலின் ஒரு சொல் அல்லது தொடர் இரண்டு பொருள்பட வருவது சிலேடை அணி ஆகும். கீழ்வரும் சொற்களில் இரண்டு பொருள் தரும் சொற்களைக் கண்டறிந்து எழுதுக.

(காலை, மாலை, ஆறு, சிலை, நூல்)

**Marks : (2)**

**Ans.** மாலை, ஆறு, நூல், கோயில்

**Que.3.** இரட்டுற மொழிதல் அணியின் வேறு பெயர்.

(சிலேடை அணி, உவமை அணி, தற்குறிப்பேற்ற அணி, உருவக அணி)

**Marks : (1)**

**Ans.** சிலேடை அணி

**Que.4.** உங்கள் பாடப்பகுதியில் கற்றறிந்த பல்லவ மன்னர்களின் ஓவியங்களைப் பற்றிய குறிப்பு எழுதுக.

**Marks : (3)**

**Ans.** கருத்து

காலம் கடந்து வாழும் ஓவியங்கள்

மாமல்லபுரம், சித்தன்னவாசல்.

அனுபவம்.

**Que.5.** தமிழ் வீரயுகப் பாடலின் ஆசிரியர்

அ) க. வை. பழசிசாமி ஆ) கைலாசபதி

இ) ந.பிச்சமூர்த்தி ஈ) பா.ஆனந்தகுமார்

**Marks : (1)**

**Ans.** ஆ) கைலாசபதி

**Que.6.** ‘முத்துப்போன்ற பற்கள்’

இதைப்போன்ற உவமைத் தொடர் வரும் சொற்கள் இரண்டினை எழுதுக.

**Marks : (2)**

**Ans.** கார் போன்ற கூந்தல்

மீன் போன்ற விழி

**Que.7.** நூலடைவு தயாரியுங்கள்

பாரத தம்பி எழுதிய ‘கற்க கசடற’ என்ற மாணவர்களுக்குப் பயனுள்ள கட்டுரை நூல். விகடன் பிரசுரம் பதிப்பகத்தால் 2016 – ஆம் ஆண்டுப் பதிக்கப்பட்டது. இதன் பக்கங்கள் 246. விலை ரூ.145. முதல் வெளியீடு – 2016.

**Marks : (5)**

**Ans.** நூல் : கற்க கசடற

ஆசிரியர் : பாதரதி தம்பி

வகை : கட்டுரை

பதிப்பகம் : விகடன் பிரசுரம்

பக்கம் : 246

விலை : 145

முதல் வெளியீடு : 2016

**Que.8.** நாடகத்துறை சார்ந்து ஏராளமான வேலைவாய்ப்புகள் இருந்தாலும் நாம் அந்தத் துறையை முழுமையாகப் புரிந்துகொள்வதில்லை. அக்குறையினைப் போக்கும் விதமாதகச் சிறப்புச் சொற்பொழிவாற்ற போராசிரியர். மு.இராமசாமி அவர்கள் உங்கள் பள்ளிக்கு வர இருக்கிறார், பள்ளித் தலைமை ஆசிரியர் தலைமை தாங்க உள்ளார். இதற்கான சுவரொட்டி ஒன்றினைத் தயார் செய்க.

**Marks : (6)**

**Ans.** வடிவம்

உள்ளடக்கம்

**Que.9.** பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை எழுதுக.

சிருஷ்டி, தஸ்தாவேஜீ, கோர்ட், கமிட்டி.

**Marks : (2)**

**Ans.** சிருஷ்டி - படைப்பு, தஸ்தாவேஜீ – ஆவணங்கள்

கோர்ட் – நீதிமன்றம், கமிட்டி – குழு.

**Que.10.** நகைச்சுவைக் கலைஞர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்களுக்குக் கலைவாணர் என்கிற பட்டம் யாரால் வழங்கப்பட்டது.

அ) டி.கே.சண்முகம் ஆ) அறிஞர் அண்ணா

இ) பம்மல் சம்பந்த முதலியார் ஈ) வி.கே. ராமசாமி.

**Marks : (1)**

**Ans.** இ) பம்மல் சம்பந்த முதலியார்.

**Que.11.** ஓவியங்கள், கதைச் சித்திரங்கள், கேலிச் சித்திரங்கள் போன்ற பல படைப்புகள் வளர்வதற்கு பத்திரிகைகளின் பங்களிப்பினைக் குறிப்பாக எழுதுக.

**Marks : (3)**

**Ans.**

1. கருத்துக்களை எளிதாகப் புரிதல்.
2. அனைத்து வார, நாளிதழ்களில் இவைகள் இடம்பெறுகின்றன.

**Que.12.** தமிழக நாட்டுப்புறக் கலைகளில் வீரக்கலையாகத் திகழ்கின்ற சிலம்புக்கலை பற்றிய குறிப்பு எழுதவும்.

**Marks : (3)**

**Ans.** கருத்து

வீரக்கலையான சிலம்பம் கொற்றவைக் கோயில்களில் நடத்தப்பட்டது.

உள்ளம், உடல் ஒருங்கிணைப்பு.

ஆன்மீகக் கலை.

வரிசைப்படுத்துதல்

**Que.13.** கிராமத்திற்குக் களப்பயணம் செல்ல இருக்கிறீர்கள். அங்குள்ள நாட்டுப்புறக் கலைஞர் ஒருவர் சந்திக்கும் பிரச்சனைகளையும் அனுபவங்களையும் அறிந்து கொள்ளும் வகையில் ஆறு வினா நிரல்களைத் தயார் செய்க?

**Marks : (3)**

**Ans.** கலைகள் நலிவதற்கான காரணங்கள்

அரசாங்கம் அளிக்கின்ற உதவிகள்

கற்றல் மற்றும் கற்பிக்கும் முறை

சமூகம், பண்பாட்டுக் கூறுகள்.

**Que.14.** பள்ளி இலக்கிய மன்ற சார்பில் 'மக்களுக்கு அதிக மகிழ்ச்சியை அளிப்பது நாட்டுப்புற கலைகளே! செவ்வியல் களைகளே!' எனும் தலைப்பில் பட்டிமன்றம் ஒன்று நடைபெற உள்ளது. அதில் நீங்கள் பேச விரும்பும் தலைப்பில் கருத்துக்களைக் குறிப்பாக எழுதுங்கள்?

**Marks : (3)**

**Ans.** கருத்துகள்

சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்

**Que.15.** மத்தவிலாசப் பிரகசனம் என்னும் நூலை இயற்றியவர்..................

அ) முதலாம் மகேந்திர வர்மப் பல்லவன்.

ஆ) நரசிம்மன்

இ) சிம்ம விஷ்ணு

ஈ)இரண்டாம் மகேந்திர வர்மப் பல்லவன்.

**Marks : (1)**

**Ans.** அ) முதலாம் மகேந்திர வர்மப் பல்லவன்.

**Que.16.** "பழுமரம் தேரும் பறவை போல

கல்லென் சுற்றமொடு கால் கிளிர்ந்து திரிதரும்

புல்லென் யாக்கைப் புலவு வாய்ப்பாண"

என்னும் பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள சங்க இலக்கிய நூல்.

அ) மதுரைக்காஞ்சி ஆ) பெரும்பாணாற்றுப்படை

இ) சிறுபாணாற்றுப்படை ஈ) திருமுருகாற்றுப்படை

**Marks : (1)**

**Ans.** ஆ) பெரும்பாணாற்றுப்படை

**Que.17.** கீழ்வரும் சொற்களின் பொருள் வேறுபாடு உணர்ந்து தனித்தனி வாக்கியங்களாக எழுதுக.

1. மலை – மழை 2. மனம் – மணம்

3. மரம் – மறம் 4. வலை – வளை

**Marks : (2)**

**Ans.**

1. மலை – இந்தியாவின் பாதுகாப்பு எல்லையாக இமயமலை விளங்குகிறது.
2. மழை – கேரளாவில் இடுக்கி மாவட்டத்தில் மழை அதிகமாகப் பெய்கிறது.

**Que.18.** அணி என்னும் சொல்லுக்கு ............... என்று பொருள்.

(அழகு, அன்பு, நடை, வடிவம்)

**Marks : (1)**

**Ans.** அழகு

**Que.19.** கீழ்க்காண்பவற்றுள் இரட்டைக் காப்பியங்களைத் தேர்வு செய்து எழுதுக?

(சிலப்பதிகாரம் மணிமேகலை, மணிமேகலை வளையாபதி, சிலப்பதிகாரம் சீவகசிந்தாமணி, சீவகசிந்தாமணி குண்டலகேசி.)

**Marks : (1)**

**Ans.** சிலப்பதிகாரம் மணிமேகலை

**Que.20.** நமது இலக்கியங்களில் ஓவியக்கலைகள் குறித்து ஏராளமான செய்திகள் இடம்பெற்றுள்ளன. நமது பாடப்பகுதியில் இடம்பெறும் இலக்கியங்களிலிருந்து ஓவியக் கலைகள் குறித்த செய்திகளைக் குறிப்பாக எழுதுங்கள்.

**Marks : (3)**

**Ans.** கருத்து

மதுரைக்காஞ்சி, தேவாரம், இரட்டைக் காப்பியங்கள். (இலக்கிய நூல்கள்).

**Que.21.** தொழிற்சாலைப் பாத்திகளில்

வியர்வை நீர் ஊற்றி

இயந்திர ரோஜாக்களை

மலர வைத்தோம்

இருந்தும்

வறுமை முட்கள்

கீறி வடுக்களே

பாடுபட்டதற்குக் கிடைத்த

பரிசுப் புத்தகங்கள்.

இக்கவிதையில் இடம்பெறும் உருவக அணியைக் கண்டுபிடித்து விளக்குங்கள்?

**Marks : (3)**

**Ans.** பொருத்தமான விளக்கம்

**Que.22.** தமிழகத்தின் கோயில் நகரம் என்று அழைக்கப்படுவது?

அ) மதுரை ஆ) தஞ்சாவூர்

இ) சென்னை ஈ) கும்பகோணம்

**Marks : (1)**

**Ans.** ஈ) கும்பகோணம்.

**Que.23.** ஆற்றுப்படை நூல்களின் எண்ணிக்கை

அ) 3 ஆ) 4

ஈ) 5 ஈ) 6

**Marks : (1)**

**Ans.** இ) 5

**Que.24.** பெருகி வரும் ஊடக வளர்ச்சி, வாழ்க்கைச் சூழல் போன்ற பல்வேறு காரணங்களால் நமது பண்பாட்டின் அடையாளங்களான நாட்டுப்புறக் கலைகள் அழிந்து வருகின்றன.

நாட்டுப்புறக் கலைகளைப் பாதுகாப்பதில் மாணவனின் பங்களிப்பு குறித்து உரையாற்றுவதற்குச் சொற்பொழிவு உரை தயார் செய்க. (குறிப்பு: பண்பாட்டின் அடையாளங்கள், மக்களிடம் விழிப்புணர்வு, கற்றல் மற்றும் கற்பித்தல்)

**Marks (5)**

**Ans.** வடிவம்

மொழிநடை

கருத்து

நாட்டுப்புறக் கலைகளைக் கற்பதில் ஆர்வம் காட்டுதல்.

விழிப்புணர்வு முகாம் நடத்துதல்

அரசாங்கத்திற்கு கோரிக்கை மனு எழுதுதல்.

**Que.25.** “கலைகள் ஐம்புலன்களுக்கும் மகிழ்ச்சி தருகிறது” இதனை மையப்படுத்தி “மனித வாழ்வில் கலைகளின் பங்கு” என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

குறிப்பு:- கலைகளின் தோற்றம் வளர்ச்சி வகைகள் – பண்பாட்டு பிரதிபலிப்பு – பொழுபோக்கு – இன்றைய நிலை.)

**Marks (5)**

**Ans.** மொழி நடை

கருத்துத் தெளிவு

மேற்கோள் பயன்பாடு

அமைப்பு

**Que.26.** மந்திர வேலைகள் செய்யும் போது பாணர்கள் பாடும் பாட்டு.

அ) துயிலுணர்த்துதம் பாட்டு

ஆ) பலிக்களப் பாட்டு

இ) வடக்கன் பாட்டு

ஈ) தெக்கன் பாட்டு

**Marks (1)**

**Ans.** ஆ) பலிக்களப் பாட்டு

**Que.27.** நாடகத்துறையின் தந்தை என அறியப்படுபவர்.

அ) சங்கரதாஸ் சுவாமிகள்

ஆ) பரிதிமாற் கலைஞர்கள்

இ) பம்பல் சம்பந்த முதலியார்

ஈ) கலைவாணர்

**Marks (1)**

**Ans.** இ) சம்மல் சம்பந்த முதலியார்.

**Que.28.** "சித்திரமும் கைப்பழக்கம்

செந்தமிழும் நாப்பழக்கம்"

என்னும் பழமொழிக்கு ஏற்ப நிகழ்ச்சி ஒன்று எழுதவும்.

**Marks (2)**

**Ans.** விளக்கம்.

வினா வகை

**Que.29.** பள்ளிக் கலைவிழாவில் நடைபெறும் கட்டுரைப் போட்டிக்கு "ஓவியக் கலை வளர்ச்சியில் தமிழர்களின் பங்களிப்பு" என்னும் தலைப்பில் கட்டுரை தயார் செய்க.

**Marks : (5)**

**Ans.** i. இலக்கியத் தகவல்கள்

ii. கோயில்களில் ஓவியம்

iii. அரண்மனைக் கட்டிடங்கள்

மேற்கோள் பயன்பாடு

மொழிநடை

**Que.30.** உங்கள் பள்ளியில் நடைபெற்ற ஓவியக் கண்காட்சியின் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறும் விதமாக உனது நண்பனுக்குக் கடிதம் எழுதவும்.

**Ans.** வடிவம்

தெளிவு

**Marks : (4)**

**Que.31.** அழிந்து வரும் நாட்டுப்புறக் கலைகளைப் பாதுகாக்கும் பொருட்டு உங்களது பள்ளியில் நடைபெறவிருக்கும் விழிப்புணர்வு முகாமிற்கு வருகை தரும் கலைமாமணி எல்.ஜான்பாவா அவர்களை வரவேற்பதற்கான வரவேற்புரை தயார் செய்க.

**Marks : (3)**

**Ans.** வடிவம்

தெளிவு

**Que.32.** கோடைகால விடுமுறையை முன்னிட்டு உங்கள் பள்ளியில் நடைபெறவிருக்கும் இலவச சிலம்புக்கலை பயிற்சி வகுப்புகளுக்கு அறிவிப்பு தயார் செய்க.

**Marks : (3)**

**Ans.** தற்காப்புக்கலை

உள்ளம், உடல், ஆற்றல் படுத்தும்.

ஆன்மீகக் கலை.

நாள், இடம், நேரம்

அமைப்பு.

**Que.33.** களிமண்ணின் கறைகள்

அப்பாவின்

வெளுத்த சட்டையில்

வெடித்த கோபத்தில்

சிதைந்தது

சிறுவனின் சிற்பம் மட்டுமா?

இக்கவிதை வரிகளுக்கு விமர்சனம் செய்து விமர்சனக் குறிப்பு எழுதுங்கள்.

**Marks : (3)**

**Ans.** கருத்து

சுய விமர்சனம்

முடிவு

**Que.34.** ஓவியனின் இலக்கணத்தைச் சுட்டிக்காட்டும் சங்க இலக்கிய நூல்...............

1. நெடுநல்வாடை 2. மதுரைக்காஞ்சி

3. பட்டினப்பாலை 4. குறிஞ்சிப்பாட்டு

**Marks : (1)**

**Ans.** மதுரைக்காஞ்சி

**Que.35.** கீழ்க்காண்பவற்றுள் கேரள கிராமிய கலைகள், தமிழ கிராமியக் கலைகளின் பெயர்களை வைகப்படுத்துக.

**Marks : (3)**

**Ans.** கேரளக் கலைகள்

வடக்கன் நாட்டு 2. தெய்யம்

3. பொறாட்டு நாடகம் 4. படையணி

தமிழகக் கலைகள்

கரகம் 2. சிலம்பம்

3. பாவைக்கூத்து 4. மயிலாட்டம்

**Que.36.** பத்மநாபபுரம் அரண்மனை - காஞ்சி

கைலாசநாதர் கோயில் - கன்னியாகுமாரி

தஞ்சை பெரிய கோயில் - புதுக்கோட்டை

சித்தன்னவாசல் – தஞ்சாவூர்

**Marks : (2)**

**Ans.** பத்மநாபபுரம் அரண்மனை - கன்னியாகுமாரி

கைலாசநாதர் கோயில் - காஞ்சி

தஞ்சை பெரிய கோயில் - தஞ்சாவூர்

சித்தன்னவாசல் – புதுக்கோட்டை

**Que.37.** கீழ்வரும் கலைகளில் தமிழக நாட்டுப்புறக் கலைகளைத் தேர்வு செய்து எழுதுங்கள்.

மோகினியாட்டம், பாவைக்கூத்து, கரகாட்டம், பரதநாட்டியம், கதகளி, பொம்மலாட்டம், ஒட்டந்துள்ளல், மயிலாட்டம்,

**Marks : (2)**

**Ans.** கரகாட்டம், பாவைக்கூத்து, மயிலாட்டமம், பொம்மலாட்டம், பரதநாட்டியம்.

**Que.38.** சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்படும் நாடோடிப் பாடகர்களின் பெயர்களைக் குறிப்பிடுங்கள்.

**Marks : (2)**

**Ans.** பாணர், கூத்தர், பொருநர், விறலியர், புலவர், அகவுநர்.

**Que.39.** நகைச்சுவை மூலம் சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் நகைச்சுவைப் பட்டிமன்ற நடுவர் அவர்களைப் பாராட்டும் வகையில் பாராட்டுக் கடிதம் ஒன்று எழுதவும்.

**Marks : (4)**

**Ans.** வடிவம்

கருத்து

ஆசிரியர், மேடைப்பேச்சாளர், இலக்கியச் சொற்பொழிவாளர், நகைச்சுவைப் பட்டிமன்ற நடுவர், நடிகர்ஈ 2010 – ஆம் ஆண்டிற்கான கலைமாமணி விருது.

உள்ளடக்கம்

முடிவு

**Que.40.** சங்கீரண சாதி என்று அறியப்படும் முதலாம் மகேந்திர வர்மப் பல்லவனைப் பற்றி சிறு குறிப்பு

**Marks : (3)**

**Ans.** தகவல்கள்.

ஓவியம், நடனம், இசை, நாடகம், சிற்பம், வீணை போன்ற துறைகளில் ஈடுபாடு.

மத்த விலாசப் பிரகசனம் (நாடகம்)

**Que.41.** புதுக்கவிதையின் தந்தை என அழைக்கப்படுபவர்.

(அ) பாரதியார் (ஆ) ந. பிச்சமூர்த்தி

(இ) வைரமுத்து (ஈ) சிற்பி பாலசுப்பிரமணியம்

**Marks : (1)**

**Ans.** (ஆ) ந. பிச்சமூர்த்தி

**Que.42.** அ. திருமுருகாற்றுப்படை - முடத்தாமக்கண்ணியார்

ஆ. சிறுபாணாற்றுப்படை - நக்கீரர்

இ. பெரும்பாணாற்றுப்படை - நத்தத்தனார்

ஈ. பொருநராற்றுப்படை - கடியலூர் உருத்திரங்கண்ணனார்

**Marks : (2)**

**Ans.**

அ. திருமுருகாற்றுப்படை - நக்கீரர்

ஆ. சிறுபாணாற்றுப்படை - நத்தத்தனார்

இ. பெரும்பாணாற்றுப்படை - கடியலூர் உருத்திரங்கண்ணனார்

ஈ. பொருநராற்றுப்படை - முடத்தாமக் கண்ணியார்

**Que.43.** சங்ககாலப் பாணர்கள் சீறியாழ், பேரியாழ் போன்ற இசைக் கருவிகளை இசைத்துப் பாடியுள்ளனர். இன்று கேரளத்தில் வாழும் பாணர்களும் துடி, கிண்ணம், கைமணி போன்ற இசைக்கருவிகளை இசைத்துப் பாடி வருகின்றனர். இதுபோன்று பல்வேறு நிலைகளில் காணப்படும் ஒற்றுமை, வேற்றுமைகளை ஒப்பிட்டு எழுதவும்.

**Marks : (3)**

**Ans.** கருத்துத் தெளிவு.

பரிசில் பெறுதல்

நாடோடி வாழ்க்கை முறை

கலைத்திறன் ஆற்றல்

**Que.44.** கீழே தரப்பட்டுள்ள தன்விவரப்பட்டியலை அடிப்படையாகக் கொண்டு வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பு எழுதுங்கள்.

பெயர் : என்.எஸ். கிருஷ்ணன்

பிறப்பு : 1908 நவம்பர் 29 நாகர்கோவில்

பெற்றோர்கள் : சுடலைமுத்துப்பிள்ளை

இசக்கியம்மாள்.

பணி : வில்லுப்பாட்டு கலைஞர்

நாடகக் கலைஞர்

திரைப்பட நகைச்சுவைக் கலைஞர்.

நடித்த திரைப்படங்கள் : அம்பிகாபதி (1937)

திருநீலகண்டர் (1939)

சகுந்தலை (1940)

ஆரியமாலா (1941)

சந்திரலேகா (1941)

மறைவு : 1957 ஆகஸ்ட் 30.

**Marks : (3)**

**Ans.** முறைப்படி தொகுத்து எழுதுதல்

: அமைப்பு முறை

**Que.46.** உலகப் புகழ்பெற்ற ஓவியக் கலைஞர் இராஜாரவிவர்மா அவர்களால் புனையப்பட்ட ஓவியங்களான தமயந்தி, சகுந்தலை இன்றும் காலத்தை வென்று வாழ்கின்றன. இவ்வாறு புகழ்பெற்ற இராஜாரவிவர்மாவைப் பற்றி குறிப்பு எழுதுக.

**Marks : (3)**

**Ans.** இராஜா ரவிவர்மா ஐரோப்பியக் கலை வடிவதத்தைக் கற்று ஓவியக் கலைக்கு ஆற்றிய பங்கு.

கடவுளின் ஓவியங்களையும், இதிகாச மாந்தர்களையும் ஓவியங்களாக வரைந்தார்.

மொழிநடை

**Que.47.** பொருத்தி எழுதுங்கள்

அ. கோபுலு - கோவில், கடவுளர் ஓவியம்

ஆ. சில்பி - கேலிச் சித்திரம்

இ. மாலி - ஆங்கிலேயர்கள்

ஈ. ஓவியக்கல்லூரி - கதைச் சித்திரம்

**Marks : (2)**

**Ans.** கோபுலு - கதைச் சித்திரம்

சில்பி - கோவில், கடவுளர் ஓவியம்

மாலி - கேலிச் சித்திரம்

ஓவியக்கல்லூரி - ஆங்கிலேயர்கள்.

**Que.48.** சித்திரகாரப் புலி என்று அறியப்படும் பல்லவ மன்னன் யார்**?**

அ. சிம்ம விஷ்ணு

ஆ. முதலாம் மகேந்திர வர்மப் பல்லவன்

இ. இரண்டாம் மகேந்திர வர்மப் பல்லவன்

ஈ. நரசிம்மன்

**Marks : (1)**

**Ans.** ஆ. முதலாம் மகேந்திர வர்மப் பல்லவன்.

**Que.49.** சு. தமிழ்ச்செல்வி அவர்கள் 'அளம்' என்ற நாவலை எழுதியுள்ளார். இந்நாவல் 2008-ஆம் ஆண்டு சென்னையிலுள்ள சந்தியா பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்டது. இந்நூலுக்கான நூலடைவைத் தயாரியுங்கள்

**Marks : (3)**

**Ans.** தகவல்களின் வரிசை முறை

**Que.50.** படைப்பாளர் நீலபத்மநாபன் அவர்கள் பள்ளி ஆண்டுவிழாவிற்குச் சிறப்பு விருந்தினராக வருகைபுரிந்து "நவீன படைப்பாக்க உத்திகள்" எனும் தலைப்பில் சிறப்புரை ஆற்ற வருகிறார். அவரை வரவேற்பதற்கான வரவேற்புரை தயார் செய்யுங்கள்.

**Marks : (3)**

**Ans.** வடிவம்
தகவல்

**Que.51.** எழுத்தாளர் நீலபத்மநாபனிடம் நேர்காணல் நடத்துவதற்கான வினாநிரல் தயார் செய்யுங்கள்

**Marks : (3)**

**Ans.**

பொருத்தமான வினாக்கள்
மொழி நடை

**Que.52.** 'கலைஞன்' சிறுகதையைத் திறனாய்வு செய்து எழுதுங்கள்.

**Marks : (5)**

**Ans.** கதைக்கரு, சூழல், மொழிநடை, கதாப்பாத்திரங்கள், உத்திa

**Que.53.** ரொம்ப சந்தோஷமுங்க.... உங்ககிட்டே ஒண்ணு கேக்கட்டுமா? கோவிச்சுக்கமாட்டீங்களே? "என்ன சார் இப்படி கேக்கறீங்க! நான் அசலூரு ஆளு.. இங்க இந்த ஊரே இன்னும் சரிவர பழகல்ல.. அதுக்குள்ளே உங்ககிட்ட எதுக்கு சார் கோவிச்சுக்கணும்? சும்மா கேளுங்க"...

மேற்கண்ட வரிகளைத் தூய தமிழ் நடையில் எழுதுங்கள்.

**Marks : (3)**

**Ans.** தூய தமிழ் நடை

**Que.54.** கீழ்க்காணும் ஆங்கில சொற்களுக்கு இணையான தமிழ் சொற்களை எழுதுங்கள்.

பஸ், ஏஜென்சி, ஸ்கூல், மியூசிக்

**Marks : (2)**

**Ans.** பஸ் - பேருந்து
ஏஜென்சி- முகமை
ஸ்கூல் - பள்ளிக்கூடம்
மியூசிக் - இசை

**Que.55.** கோயிளில் திருட்டு நடந்தது. போழிஸ் வந்து விசாறணை நடத்திணர். - பிழைகளை நீக்கி சரியாக எழுதுங்கள்.

**Marks : (2)**

**Ans.** கோயிலில், திருட்டு, போலிஸ், விசாரணை நடத்தினர்

**Que.56.** பெயர் : நீலபத்மநாபன்
பிறந்த ஆண்டு : 26/4/1938
இடம் :கன்னியாகுமரி மாவட்டம் இரணியல்
பெற்றோர்கள் : நீலகண்டன்பிள்ளை ஜானகி அம்மாள்
கல்வித் தகுதி :இளங்கலை பட்டப்படிப்பு(இயற்பியல்)
பணி :மின் பொறியாளர்
படைப்புகள் : தலைமுறைகள் பள்ளிகொண்டபுரம்

தேர் ஓடும் வீதி வெள்ளம்
விருது :2007 சாகித்திய அகாதமி விருது

மேற்கண்ட தகவல்களின் அடிப்படையில் திரு. நீலபத்மநாபனின் வாழ்க்கைக் குறிப்பு தயார் செய்யுங்கள்.

**Marks : (4)**

**Ans.** தகவல்களின் தொகுப்பு

வரிசைமுறை

மொழிநடை

**Que.57.** நீல பத்மநாபனுக்கு சாகித்திய அக்காதமி விருது கிடைத்த ஆண்டு

(அ) 2007 (ஆ) 2006 (இ) 2008 (ஈ) 2009

**Marks : (4)**

**Ans.** (அ)2007

**Que.58.** இலையுதிர்க் காலம் என்ற நாவலை எழுதியவர்

(அ) நீல பத்மநாபன் (ஆ) ஆ. மாதவன்
(இ) ராஜநாராயணன் (ஈ) சண்முக சுந்தரம்

**Marks : (1)**

**Ans.** (அ) நீல பத்மநாபன்

**Que.59.** நீல பத்மநாபன் அவர்களுக்கு சாகித்திய அகாதமி விருதைத் தேடித் தந்த நாவல்

(அ) இலையுதிர்க் காலம் (ஆ) பள்ளி கொண்டபுரம்
(இ) உறவுகள் (ஈ) தலைமுறைகள்

**Marks : (1)**

**Ans.** (அ) இலையுதிர்க் காலம்

**Que.60.** இலையுதிர்க் காலம் என்ற நாவலை எழுதியவர்

(அ) நீல பத்மநாபன்        (ஆ) ஆ. மாதவன்
(இ) ராஜநாராயணன்        (ஈ) சண்முக சுந்தரம்

**Marks : (1)**

**Ans.** (அ) நீல பத்மநாபன்

**Que.61.** நீல பத்மநாபன் அவர்களுக்கு சாகித்திய அகாதமி விருதைத் தேடித் தந்த நாவல்

(அ) இலையுதிர்க் காலம் (ஆ) பள்ளி கொண்டபுரம்
(இ) உறவுகள் (ஈ) தலைமுறைகள்

**Marks : (1)**

**Ans.** (அ) இலையுதிர்க் காலம்

**Que.62.** அக்டோபர் முதலாம் திங்கள் கிழமை உலக கட்டிடக்கலை நாளை முன்னிட்டு உங்களது வட்டாரத் தொலைக்காட்சியில் ஒலிபரப்ப "உலகம் அறியும் தமிழர் கட்டிடக்கலை" என்னும் தலைப்பில் உரையாற்றுவதற்கான தொலைக்காட்சி உரை தயாரியுங்கள்.

**Marks : (1)**

**Ans.** முகமன்
கருத்துக்கள்
சொல்லாட்சி
மொழிநடை

**Que.63.** ஜூன் -20 ஆம் தேதி உங்கள் பள்ளிக்கு கட்டிடக்கலை நிபுணர் திரு. இராம கிருஷ்ணன் அவர்கள் வருகை தர உள்ளார். இச்செய்தியை மாணர்களுக்கு அறிவிக்கும் வகையில் சுற்றறிக்கை தயாரியுங்கள்.

**Marks : (3)**

**Ans.**

வடிவம்
தெளிவான செய்தி

**Que.64.** முனைவர் டி. எஸ். தாண்டவ மூர்த்தி எழுதிய 'கற்போம் கட்டக்கலை 'என்னும் கட்டுரை நூல் ,சென்னையிலுள்ள நியூ செஞ்சுறி பதிப்பகத்தாரால் 2012-ஆண்டு 170 பக்கங்களுடன் பதிப்பிக்கப்பட்டு 120 ரூபாய்க்கு விற்பனையாகிறது.

இந்நூலினை நூலடைவு செய்து எழுதுங்கள்

**Marks : (3)**

**Ans.** வடிவம்
வரிசைப்படுத்துதல்

**Que.65.** தமிழர்களின் மரபுச்சின்னங்கள் அரசுமாளிகைகள் கோயில்கள் போன்றவை அழிந்து வருவதற்கான காரணங்களையும் அதற்கான தர்வுகளையும் எடுத்துக்கூறும் வகையில் தலையங்கம் தயார்ச் செய்யுங்கள்

**Marks : (5)**

**Ans.** வடிவம்
பிரச்சினையை பகுப்பாய்வு செய்தல்
காரண காரியங்களிடன் தொடர்புபடுத்துதல்
தீர்வு

**Que.67.** தஞ்சை பெரிய கோயிலின் கட்டிட அமைப்பு மற்றும் ஓவியச் சிறப்புக்களை எடுத்துக் கூறும் முறையில் உங்கள் நண்பனுக்கு கடிதம் ஒன்று தயார்ச் செய்யுங்கள்.

**Marks : (4)**

**Ans.**

வடிவம்
உள்ளடக்கச்செய்தி

**Que.68.** 'தட்சின மேரு' என அழைக்கப்படும் கோயில்

(அ)மீனாட்சி அம்மன் கோயில் (ஆ) பத்மநாப சுவாமி கோயில்

(இ) தஞ்சை பெரிய கோயில் (ஈ) நெல்லையப்பர் கோயில்

**Marks : (1)**

**Ans.** இ) தஞ்சை பெரிய கோயில்

**Que.69.** தட்சின மேரு ஆலையத்தைக் கட்டிய மன்னன்

(அ)கரிகால சோழன் (ஆ) இராஜராஜன்

(இ) இராஜேந்திரன் (ஈ) மகேந்திர வர்மன்

**Marks : (1)**

**Ans.** (ஆ) இராஜராஜன்

**Que.70.** மோர்க்காரக் கிழவியின் பண்பு நலன்கள் உங்கள் மனதில் ஏற்படுத்திய தாக்கத்தைக் குறிப்பாக எழுதுங்கள்.

**Marks : (3)**

**Ans.** கருத்துக்கள்
மொழிநடை

**Que.71** தஞ்சைப்பெரிய கோயில் கட்டிட அமைப்பு மற்றும் ஓவியச் சிறப்புகளை விளக்கும் விதமாக இலக்கிய மலரில் வெளியிடுவதற்கு தமிழர்களும் கட்டிடக்கலையும் எனும்.

**Marks : (5)**

**Ans.** வடிவம்
கருத்துக்கள்
மொழிநடை

**Que.72.** "அதெல்லாம் எனக்கு எதுக்குங்க ஐயா? பேரும் பெருமையும் வந்து எனக்கு என்ன ஆகப் போகுது?" இவ்வரிகள் உணர்த்தும் வந்திக் கிழவியின்  மனப்பான்மையினையும் ,உங்கள் மன நிலையினையும் குறிப்பாக எழுதுங்கள்.

**Marks : (3)**

**Ans.** கருத்துக்கள்
மொழிநடை

**Que.73.** "சந்தேகம்னு ஒண்ணு வந்திட்டா உடனே கேட்டுற தான் நியாயம்.ஏன்னா , சந்தேகம் பெரிய வியாதின்னு பெரியவங்க சொல்லிருக்காங்க நீ உடனே சட்டுப்புட்டுன்னு கேடடுடுப்பா.... என்ன சந்தேகம் உனக்கு?"

- இப்பகுதியினை தூயத்தமிழ் நடையில் எழுதுங்கள்.

**Marks : (3)**

**Ans.** சரியான தமிழ் நடை

**Que.74.** பண்டைய மற்றும் நவீன சிற்பக்கலை வடிவங்கள் நுணுக்கங்களைப் பற்றிஅறிந்து கொள்வதற்கு ,சிற்பக்கலைஞர் ஒருவரை பேட்டி காண்பதற்கான வினாநிரல் தயாரியுங்கள்.

**Marks : (4)**

**Ans.** பொருத்தமான வினாக்கள்

**Que.75.** முதல் நிகண்டான திவாகரம் இயற்றியவர்.

அ) திவாகரர் ஆ) எஸ். வையாபுரிப்பிள்ளை

இ) ஜி.பார்க்கவன் ஈ) கைலாசபதி.

**Marks : (1)**

**Ans.** அ) திவாகரர்

**Que.76.** ஓவியத்திற்கு நீ ஒரு பொருள் கூறினாய்

நானொன்று கூறினேன். இன்னொருவர்

இன்னொன்று கூறலாம். அதனால்தான்

உண்மையான கலைக்குப் பொருளே தேவை

இல்லை என்கிறார்கள்.

மேற்கூறிய கூற்றின் அடிப்படையில் கலையின் தனித்துவம் பற்றி குறிப்பு எழுதவும்.

**Marks : (3)**

**Ans.** நவீன ஓவியங்களின் சிறப்பு

வாசகனின் மனநிலை (இரசிப்புத் தன்மை)